



# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351






வியாழன் ❖ மே. 04, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 209 ❖ ரூ.10


காணாமல் போன குளத்தைக் கண்டறிந்து தூர்வாரிய ஊராட்சி மன்றத் தலைவர்

# சபாஷ்

## 50 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாத ஊரணி, குளங்களை நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தூர்வார நடவடிக்கை ராமநாதபுரம் கலெக்டர் நேரில் சென்று பாராட்டு



**ராமநாதபுரம் ,மே.04-**

**ராமநாதபுரம் அருகே பல ஆண்டுகளாக காணாமல் போன குளத்தைக் கண்டறிந்து, குளத்தை தூர்வாரிய ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.**

ராமநாதபுரம் மாவட்டம்திருவாடானை தாலுகாவில் உள்ள ஓரியூர், கலியநகரி புல்லகடம்பன் உள்ளிட்ட ஊராட்சிகளில் நீர்வடிப்பகுதிமேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஊரணி, குளங்கள், கண்மாய்கள் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ் நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது குளங்கள் வெட்டபடும் அளவுகள் குறித்து கேட்டறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர், குளங்கள், ஊரணி வெட்டப்பட்டுள்ள அளவு குறித்து நேரில் ஆய்வு செய்தார். ஓரியூர் ஊராட்சியில் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாத ஊரணி, குளங்களை நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ்தூர்வார நடவடிக்கை எடுத்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் பொதுமக்கள் நேரில் சந்தித்து நன்றித் தெரிவித்தனர்.

மேலும் ஆக்கிரமப்புகளை அகற்றி காணாமல் போன குளத்தைக் கண்டறிந்து தூர் வாரிய ஊராட்சி மன்றத் தலைவர் நிரோஷா கோகுல் மற்றும் அலுவலர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டினார். கோடைகாலத்தில் மீதமுள்ள குளங்கள், ஊரணிகள், கண்மாய்களை தூர்வாரவும், சாலை மற்றும் குடிநீர் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க கோரியும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு தேவையான தார்ப்பாய் மற்றும் மருந்து அடிக்கும் இயந்திரம் உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் திருவாடானை ஒன்றிய பெருந்தலைவர் முகமது முக்தார்,வேளாண்இணை இயக்குனர் சரஸ்வதி, துணை இயக்குனர் தனுஷ்கோடி, உதவி இயக்குனர் ராம்குமார், உதவி பொறியாளர் புஷ்பநாதன், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு திட்ட பொறியாளர் தேவராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# டாஸ்மாக் வருமானத்தில் அரசை நடத்த வேண்டிய அவசியம் ஏதும் இல்லை: அமைச்சர் செந்தில் பாலாஜி



**சென்னை ,மே.04-**

**“டாஸ்மாக் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அரசை நடத்த வேண்டிய அவசியம் இல்லை” என்று அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தார்.**

சென்னை திருமங்கலத்தில் உள்ள வி.ஆர்.மாலில் உள்ள டாஸ்மாக் கடையில் வைக்கப்பட்டுள்ள தானியங்கி மது விற்பனை இயந்திரத்தை அமைச்சர் செந்தில் பாலாஜி இன்று ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "திமுக ஆட்சி அமைந்த இரண்டு ஆண்டு காலத்தில் இதுவரை 96 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால்,சிலபத்திரிகைகள், தமிழக அரசு டாஸ்மாக் மூலம்வரும்வருமானத்தால் செயல்படுவது போல் செய்தி வெளியிடுவது வேதனை அளிக்கிறது.

இந்த மாலில் உள்ள கடையை பொறுத்தவரையில் பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரைதான் செயல்படுகிறது. டாஸ்மாக் கடையும் அந்த நேரத்தில் மட்டும்தான் இயங்கும். இதனை 24 மணி நேரம் பயன்படுத்தலாம், கடைக்குவெளியே உள்ளது. ATM-ஐ உடைத்து எடுப்பது போல் இதனை உடைத்து எடுத்துக் கொள்ளலாம் என்று எல்லாம் தவறான செய்தியைப் பரப்புகின்றனர்.

இந்தக் கடைக்குள் தானியங்கி இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளதா அல்லது வெளியேவா, 24 மணி நேரமும் எடுக்க முடியுமா என்று தெரிந்து செய்தி வெளியிடுங்கள். 21 வயதுக்கு குறைவுடைய யாராவது இதில் மது வாங்க முடிகிற அளவுக்கு உள்ளதா? இரண்டு ஊழியர்கள் கண்காணிப்பில்தான் கடை இயங்குகிறது. இந்தக் கடை எங்கு உள்ளது, எப்படி செயல்படுகிறது என்று தெரிந்து செய்தி வெளியிடுங்கள்.

29% நாடாளுமன்ற வருகை பதிவு கொண்ட நாடாளுமன்றத்திற்கே போகாதவர் இது குறித்து செய்தி வெளியிடுகிறார். 2019-இல் தான் இந்த தானியங்கி இயந்திரம் திறக்கப்பட்டது. 2013, 2014, 2018 என நான்கு ஆண்டுகளில் நான்கு கடைகளில் அதிமுக ஆட்சியில் தான் திறக்கப்பட்டது. டாஸ்மாக் நிறுவனம், இந்த தானியங்கி இயந்திரத்திற்கு ஒரு ரூபாய் கூட செலவு செய்யவில்லை. உள் கட்டமைப்பு வசதிகளை மது நிறுவனங்கள் செய்கின்றன. அதைக் கடைகளில் பயன்படுத்துகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் , அன்புமணி உட்பட யாராவது நாடாளுமன்றத்தில் பேசி, இந்தியா முழுவதும் பூரண மதுவிலக்கு கொள்கையை கொண்டு வர வேண்டியதுதானே. அதற்கு தைரியமில்லை, இங்கு வந்து அரசியல் செய்கிறார்கள். சட்டப்பேரவையில் சில்லறை விற்பனை நடைபெறும் 500 கடைகள் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. டாஸ்மாக்மூலம்கிடைக்கும் இந்த வருமானத்தை கொண்டு அரசு நடத்த வேண்டிய அவசியம் திமுக அரசுக்கு இல்லை. கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்த 1977 பேர் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஐந்தரை கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. சமூக வலைதளங்களில் வெளியிடப்படும் செய்திகளை கொண்டு உண்மைத் தன்மையை ஆராயாமல் செய்தி வெளியிட வேண்டாம். டாஸ்மாக் நிறுவனம் மூலம் வரும் வருமானத்தை வைத்து அரசை நடத்துவது போன்று சித்தரித்து செய்தி வெளியிடும் பத்திரிகை, தொலைக்காட்சி, செய்தி நிறுவனம் சமூக வலைத்தளம் என யாராக இருந்தாலும் சட்டபடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று அமைச்சர் கூறினார்.

‘வீதியில் போராடுவது ஒழுக்கமின்மை’

# விமர்சனத்திற்கு பின்னர் மல்யுத்த வீராங்கனைகளை சந்தித்த பி.டி.உஷா



புதுடெல்லி ,மே.04-

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஷனுக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தி வரும் மல்யுத்த வீராங்கனைகளை இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி.டி.உஷா நேற்று சந்தித்தார்.

பாஜக எம்.பி.யும், இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது பிரபல மல்யுத்த வீராங்கனைகளான வினேஷ் போகத், சாக்சி மாலிக் உள்ளிட்ட 7 பேர் பாலியல் குற்றச்சாட்டு சுமத்தினர். இது தொடர்பாக பிரிஜ் பூஷன் சரண்சிங்மீதுவழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மல்யுத்த வீராங்கனைகள் ஜந்தர் மந்தர் மைதானத்தில் தங்களின் போராட்டத்தை தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் போராட்டம் நடத்தி வரும் வீராங்கனைகளை இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி.டி. உஷா நேற்று ஜந்தர் மந்தருக்குச் சென்று சந்தித்தார். வீரர்களின் போராட்டம் குறித்து ‘வீதியில் போராடுவது ஒழுக்கமின்மை’ என்று உஷா விமர்சித்த சில நாட்களுக்கு பின்னர் இந்த சந்திப்பு நிகழ்கிறது.

இந்த விவகாரத்தில் விசாரணை மேற்கொள்வதற்கு காலதாமதம் ஏற்படுவது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வீராங்கனைகள் செவ்வாய்க்கிழமை தங்களின் கோபத்தினை வெளிப்படுத்தி இருந்தனர்.

மேலும் அவர்கள், பி.டி. உஷா மற்றும் தடகள கூட்டமைப்பின் தலைவரும்பிரபலமல்யுத்த வீராங்கனையுமான மேரி கோம் ஆகியோர் தங்களைக் கைவிட்டு விட்டதாக தங்களின் அதிருப்தியை வெளிப் படுத்தியிருந்தனர்.

முன்னதாக, கடந்த வாரத்தில் மல்யுத்த வீரர்களின் போராட்டம் குறித்து கருத்து தெரிவித்திருந்த பி.டி.உஷா, "மல்யுத்த வீரர்கள் தெருக்களில் போராட்டம் நடத்துவது ஒழுக்கமின்மைக்கு சமம். அவர்கள் விசாரணைக் குழுவின் அறிக்கை வரும் வரைக்காவது காத்திருந்திருக்க வேண்டும். அவர்களின் செயல்விளையாட்டிற்கும் நாட்டிற்கும் நல்லதில்லை. இது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்" என்று தெரிவித்திருந்தார்.

பி.டி. உஷாவின் இந்தக் கருத்துக்கு வீராங்கனைகள் கடுமையாக எதிர்வினையாற்றியிருந்தனர். பி.டி. உஷாவின் பேச்சு எங்களை மிகவும் காயப்படுத்தியுள்ளது. ஒரு பெண்ணாக இருந்தும் அவர் எங்களுக்கு ஆதரவளிக்கவில்லை.நாங்கள் என்ன ஒழுங்கீனத்தில் ஈடுபட்டோம். நாங்கள் அமைதியாக இங்கே அமர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு நீதி கிடைத்திருந்தால் நாங்கள் இதைச் செய்திருக்க மாட்டோம்" என்று மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக் கூறியிருந்தார்.

"இந்தவிவகாரம் குறித்து பேச நாங்கள் பி.டி. உஷாவை அழைத்தோம். அவர் எங்கள் அழைப்பிற்கு பதில் அளிக்கவில்லை. அவர் ஏதாவது அழுத்தத்தில் இருக்கின்றாரா என்று தெரியவில்லை என்று" வினேஷ் போகத் தெரிவித்திருந்தார். என்பது குறிப்பிடதக்கது.

# சென்னையில் ‘மக்களைத் தேடி மேயர் திட்டம்’ தொடக்கம் பொதுமக்களிடம் மனுக்களை பெற்ற மேயர் பிரியா



**சென்னை ,மே.04-**

**மக்களைத் தேடி மேயர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடம் மேயர் பிரியா மனுக்களை பெற்றார்.**

சென்னை மாநகராட்சி 2023 24ம் பட்ஜெட் கூட்டத் தொடரில், ‘மக்களைத் தேடி மேயர் திட்டம்’ செயல்படுத்தப்படும் என மேயர்பிரியா அறிவித்தார். அந்தத் திட்டத்தை உடனடியாக அமலுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி, மக்களை தேடி மேயர் திட்டத்தின் முதல் குறைதீர்வு கூட்டம் சென்னை ராயபுரத்தில் உள்ள மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

புகார் தெரிவிக்க வரும் பொது மக்கள், தங்களது பெயரை பதிவு செய்து ரசீது பெற்று கொண்ட பின்னர் மேயரை சந்திக்கவும், புகாரினை மாநகராட்சி பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தன. மக்களை தேடி மேயர் திட்டத்தின் வாயிலாக பொதுமக்கள் தங்கள் பகுதி சார்ந்த அடிப்படை பிரச்சினைகள் குறித்தும், அவர்களுக்குதேவையான உதவிகளை குறித்தும் மனுவாக வழங்கலாம். மாநகராட்சிதொடர்பான உதவிகள், மற்றும் புகார்களை மாநகராட்சி ஏற்றுக்கொள்ளும், மாநகராட்சி தொடர்பில்லாத மற்ற துறை புகார்கள் உரிய துறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்தசிறப்பு முகாமில், மேயர் பிரியா ராஜன் அமைச்சர் சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஐ ட்ரீம்ஸ் மூர்த்தி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். பொதுமக்களை சந்தித்து மனுக்களை பெற்றுக் கொண்ட பின் செய்தியாளர்களை சந்தித்த மேயர் பிரியா, "சென்னை மாநகராட்சி நடப்பு நிதியாண்டில் மக்களை தேடி மேயர் திட்டம் அறிவிக்கப்பட்டது. தன்படி மண்டலம் ஐந்தில் மக்களை தேடி திட்டம் நடைபெற்று வருகிறது.

கோரிக்கைகளை மக்கள் நேரிடையாக வழங்கலாம். மனு மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். மனு பெறப்பட்டதற்கான ரசீது வழங்கப்படும். சென்னை மாநகராட்சி வலைதளத்தில் அவர்கள் கொடுத்துள்ள மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிந்துகொள்ளலாம். மனுவின் நிலை மற்றும் அது எந்த அதிகாரியின் நடவடிக்கைக்கு கீழ் உள்ளது என்பதை அறிந்துகொண்டு அலுவலரை தொடர்பு கொள்ளவும் முடியும். இந்த திட்டம் 15 நாட்களுக்கு ஒரு முறை என அனைத்து மண்டலங்களிலும் செயல்படுத்தப்படும். மனுக்களை பெறுவது மட்டுமின்றி, அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்பட வேண்டும் என்பதனால் 15 நாட்களுக்கு ஒரு முறை இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது" என்றார்.

இதனைத்தொடர்ந்து பேசிய அமைச்சர் சேகர்பாபு, "15 நாட்களுக்கு ஒரு முறை என்பது அதிக இடைவெளியாக தோன்றும் பட்சத்தில் அதனை குறைக்க மேயர் உள்ளிட்டவர்கள் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள். மக்களுக்காக களத்தில் இறங்கி பணியாற்ற மேயர் துடிப்புடன் தயராக உள்ளார்.

சென்னை மாநகராட்சியில் இடியும் நிலையில் உள்ள கட்டடங்களை இடித்து அகற்ற உத்திரவிடப்பட்டும். அந்த பணியை உரிமையாளர்கள் முடிக்காத நிலையில், அதன் அருகில் யாரும் செல்லாத வகையில் மாநகராட்சி தடுப்புகள் அமைத்ததால் தான் கட்டட இடிந்து விழும்போது உயிர் சேதம் தவிர்க்கப்படுகிறது.

சட்ட, விதி மீறல் இருந்தால் அவர்கள் மீது பாரபட்சம் இன்றி நடவடிக்கைகள் இந்த அரசில் எடுக்கப்பட்டு வருகிறது. உப்பு சாப்பிட்டவர்கள் தண்ணீர் குடிக்க வேண்டும். தப்பு செய்தவர்கள் தண்டனை பெற வேண்டும் என்பதில் முதல்வர் உறுதியாக உள்ளார். ஒரு குற்ற வழக்கில் எடுத்தவுடன் நீதிமன்றம் செல்ல முடியாது. முறையாக விசாரணை நடைபெற்று வருகிறது" என்று அவர் கூறினார்.

# கூவாகம் கூத்தாண்டவர் திருக்கோவில் அரவான் கடபலி விழா சோகத்துடன் திரும்பிய திருநங்கைகள்



கள்ளக்குறிச்சி,மே.04-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கூவாகம் கிராமத்தில் உள்ள கூத்தாண்டவர் கோவில் சித்திரை திருவிழா நடைபெற்றது.

இவ்விழாவானது இக்கிராமத்தைசுற்றியுள்ள குறிப்பிட்ட கிராமங்களில் இருந்து அரவான் என்கின்ற கூத்தாண்டவர் சுவாமியின் கைகள், கால்கள், சிரசு உள்ளிட்ட பாகங்களை கொண்டுவரப்பட்டு கூத்தாண்டவர் சுவாமி அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் பக்தர்களுக்கு காட்சி அளித்த வண்ணம் திருத்தேர் வீதி உலா நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் கலந்து கொண்டு திருத்தேரை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தார்.


இதனைத்தொடர்ந்து திருத்தேர் அருகே உள்ள கூவாகநத்தம் கிராமத்தில் உள்ள பந்தலடியில் அரவான் பலியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்ட திருநங்கைகள் ஆடி பாடி கும்மி அடித்து மகிழ்ந்தனர், நேற்று அரவான் பலியிடும் நிகழ்ச்சியில்திருநங்கைகள் தங்களது கைகளில் உள்ள வளையல்களை உடைத்தும், தலையில் சூடி இருந்த பூக்களை அகற்றியும், தாலிகளை அறுத்து வெள்ளைநிற சேலை அணிந்து விதவை கோலத்தில் சோகத்துடன் தங்களது சொந்த ஊர்களுக்கு சென்றனர். அப்பொழுது திருநங்கைகள் கூறுகையில் நாங்கள் பல்வேறு ஊர்களில் இருந்து வந்து கூத்தாண்டவர் கோவில் திருவிழாவில் அனைவரையும் சந்திப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளதாக தெரிவித்தனர்,

இந்த வருட திருவிழாவில் மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர், தற்காலிக கழிவறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் உள்ளிட்ட வசதிகளை செய்திருந்ததாகவும், தெரிவித்தனர், குறிப்பாக வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களில் இருந்து வரும் பொதுமக்கள் மற்றும் திருநங்கைகளுக்கு வழித்தடங்கள் சுலபமாக கண்டு கொள்ளும் வகையில் பல்வேறு இடங்களில் வழித்தட மேப் பேனர் வைக்கப்பட்டிருந்தது மிகவும் சிறப்பானதாகவும் தெரிவித்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# விராலிமலை அருகே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளரை கண்டித்து விவசாயிகள் போராட்டம்

விராலிமலை, மே.4–

விராலிமலை அருகே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிமேற்பார்வையாளரை கண்டித்து விவசாயிகள் சாலைமறியலில் ஈடுபட அலுவலகத்தின் முன்பு திறண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.



விராலிமலை தாலுகா நம்பம்பட்டி கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உள்ளது. இதன்மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் அப்பகுதி பொதுமக்களுக்கு செயல்படுத்தப்பட்டுவருகிறது. இங்கு மேற்பார்வையாளராக மத்திய கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர் தனபால் என்பவரும் செயலாளராக துரையப்பன்(பொறுப்பு) என்பவரும் வேலைபார்த்து வருகின்றனர். இந்த கூட்டுறவு வங்கியில் விவசாய கடன், நகைக்கடன், பருத்தி, கரும்பு, நெல் காப்பீடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய திட்டங்களை செயல்படுத்துவதில் மேற்பார்வையாளர் தனபால் தாமதப்படுத்துவதாகவும் இதுகுறித்து அவரிடம் விவசாயிகள் கேட்கும் போது முறையாக பதில் கூற மறுப்பதாகவும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் சார்பில் கூறப்படுகிறது. மேலும் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக தினந்தோறும் இங்கு வந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பி செல்வதாகவும் விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர். இதனையடுத்து செவ்வாய்க்கிழமை காலையிலும் வழக்கம்போல் மேற்பார்வையாளர் வராததால் ஆத்திரமடைந்த நம்பம்பட்டி சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் சிலர் கூட்டுறவு வங்கி முன்பு சாலை மறியலில் ஈடுபடப்போவதாக கூறி அலுவலகம் முன்பு ஒன்று திறண்டனர். இதனால் கூட்டுறவு வங்கி அலுவலகமும் காலை 11 மணி வரை திறக்கப்படாமலேயே இருந்தது.

இதனையறிந்த நம்பம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் முருகேசன் மற்றும் விராலிமலை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்து விரைவில் நடவடிக்கை எடுப்பதாக விவசாயிகளிடம் உறுதியளித்ததையடுத்து அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# பல்வீர் சிங் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது

## விசாரணைக்கு ஆஜராக 8 பேருக்கு சம்மன்

சென்னை , மே, 4 –

திருநெல்வேலியில் குற்ற வழக்குகளில் சிக்கிய குற்றம்சாட்டப்பட்டவர்களின் பற்கள் பிடுங்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏஎஸ்பியாக இருந்த பல்வீர் சிங் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் சிபிசிஐடி போலிஸ் வழக்குப்பதிவு செய்துள்ளது.



திருநெல்வேலியில் குற்ற வழக்குகளில் சிக்கிய குற்றம் சாட்டப்பட்டவர்களின் பற்களை அம்பாசமுத்திரம் ஏஎஸ்பியாக இருந்த பல்வீர் சிங் பிடுங்கியதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக சேரன் மகாதேவி சார் ஆட்சியர் முதலில் விசாரணை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து பல்வீர் சிங் மார்ச் 29–ம் தேதி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். அம்பாசமுத்திரம் காவல் உட்கோட்டத்தில் பணியாற்றி வந்த காவலர்கள் ராஜ்குமார், போகபூமன், சந்திரசேகரன், ராஜகுமாரி, ஏ.பெருமாள், என்.சக்தி நடராஜன், எம்.சந்தானகுமார், வி.மணிகண்டன் ஆகியோர் ஆயுதப்படைக்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, குற்றம்சாட்டப்பட்டவர்களின் பற்கள் பிடுங்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த உயர்மட்ட அதிகாரியான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் அமுதாவை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டிருந்து. மேலும், ஒரு மாத காலத்திற்குள் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதன்படி, மூத்த ஐஏஎஸ் அதிகாரி அமுதா 2–ம் கட்ட விசாரணை நடத்தி வருகிறார்.

இதனிடையே, ஏஎஸ்பியாக இருந்த பல்வீர் சிங் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, பல்வீர் சிங் மீது திருநெல்வேலி மாவட்ட குற்றப் பிரிவு காவல் துறை 324, 326, 506–1 ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளது.

இந்நிலையில், ஐஏஎஸ் அதிகாரி அமுதா தாக்கல் செய்த இடைக்கால அறிக்கையில் 'வழக்கு விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டும்' என்று பரிந்துரை செய்திருந்தார். இதன்படி பல்வீர் சிங் வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி டிஜிபி சைலேந்திர பாபு அன்மையில் உத்தரவிட்டார். இந்நிலையில், ஏ.எஸ்.பி. பல்வீர் சிங்மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் சிபிசிஐடி போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மேலும், நாளை 5–ம் தேதி நெல்லையில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக 8 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.




# நடிகரும் இயக்குநருமான மனோபாலா காலமானார்

## சோகத்தில் திரையுலக ரசிகர்கள்

சென்னை , மே, 4 –

தமிழ்சினிமாஇயக்குநரும், நடிகருமான மனோபாலா சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு 1979 ஆம் ஆண்டு பாரதிராஜா இயக்கத்தில் வெளியான புதிய வார்ப்புகள் படத்தின் மூலம் உதவி இயக்குநராக அறிமுகமான மனோபாலா அப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்திலும் நடித்திருந்தார்.



அதை தொடர்ந்து நிறம் மாறாத பூக்கள், கல்லுக்குள் ஈரம், என ஏராளமான படங்களில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்தார். பாலா இயக்கத்தில் வெளியான பிதாமகன் படத்தில் அவரது கதாபாத்திரம் பேசப்பட்டது. வடிவேலு, விவேக், சந்தானம் ஆகியோருடன் இணைந்து நடித்த நகைச்சுவை காட்சிகள் பிரபலமாகின.

விவேக் உடன் ஒரு படத்தில் அவர் பேசியது 'எப்படி இருந்த நான் இப்படி ஆகிட்டேன்' என்ற வசனம் டிரேட் மார்க் ஆனது.


நடிப்பு தவிர்த்து ஏராளமான படங்களையும் மனோபாலா இயக்கியுள்ளார். ரஜினிகாந்த், மோகன், சத்யராஜ், கார்த்திக் என பல்வேறு முன்னணி நடிகர்களை வைத்து படம் இயக்கியுள்ளார்.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு உடல்நலக் குறைவால் சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று உடல்நலக் குறைவால் காலமானார். அவரது மறைவுக்கு பிரபலங்கள், ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# ஆறுதல் கூற வந்தவருக்கு ஆறுதல் கூறிய ரஜினிகாந்த் சந்திரபாபு நாயுடு மிரட்சி

அமராவதி , மே, 4 –

தெலுங்கு தேசம் கட்சித்தலைவர் சந்திரபாபு நாயுடு நடிகர் ரஜினிகாந்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, அவரிடம் யார் என்ன கூறினாலும், உங்கள் மீதுள்ள மரியாதை மாறாது என ரஜினி தெரிவித்துள்ளார்.



மறைந்த நடிகர் என்.டி.ராமாராவின் நூற்றாண்டு தொடக்கவிழாவிஜயவாடாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நடிகர் ரஜினிகாந்த், தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு, என்டிஆரின் மகன் பாலகிருஷ்ணா ஆகியோரை புகழ்ந்து பேசினார். இதனால் ரஜினிகாந்த், ஒய்ஆர்எஸ் காங்கிரஸ் கட்சியினரின் விமர்சனத்துக்கு ஆளானார். இதற்கு சந்திரபாபு நாயுடு கடும் கண்டனம் தெரிவித்தார். எனினும் ரஜினியை விமர்சிப்பதை ஜெகன் கட்சியினர் நிறுத்தவில்லை.

இந்த சூழலில் ரஜினியை சந்திரபாபு நாயுடு செவ்வாய்கிழமை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். அப்போது இந்த விமர்சனங்கள் குறித்து பேச்சு எழுந்தது. விமர்சனங்கள் பற்றி எதுவும் நினைக்க வேண்டாம் என சந்திரபாபு நாயுடு கேட்டுக்கொண்டார். இதற்கு ரஜினி, "அப்படி எதுவும் நான் நினைக்கவில்லை. அதுபற்றி சிந்திக்க கூட இல்லை. ஆனால், யார் என்ன கூறினாலும் உங்கள் மீதுள்ள மரியாதை என்றும் மாறாது" என்று கூறியுள்ளார்.

# அரிமளம் வீரம்மாள் ஏஜென்சி பெட்ரோல் பங்கில் சிறப்பு ஆதார்எடுக்கும் முகாம் துவக்கம்

அரிமளம், மே.04–

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் வீரம்மாள் ஏஜென்சி பாரத்பெட்ரோல் பங்க் மற்றும் இந்திய அஞ்சல் துறை புதுக்கோட்டை கோட்டம் இணைந்து சிறப்பு ஆதார் முகாமினை அரிமளத்தில் நடத்தியது, இதை ஓணாங்குடி ஊராட்சி மன்றத் தலைவரும் வீரம்மாள் ஏஜென்சி நிருவனருமானா கே.ஆர்.முருகேசன் துவக்கிவைத்தார்.



புதன், மற்றும் வியாழன் இரு நாட்கள் இந்த முகாம் நடக்கிறது, நிகழ்ச்சியில் அஞ்சல் துறை ஆய்வாளர் ஷாலினி, அஞ்சல்துறை வணிக பிரிவு மேலாளர் நாகநாதன், மெயில் ஓவர்சியர் ஆதவன் கலந்து கொண்டு ஆதார திருத்தத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்களிடம் எடுத்துக் கூறிய பின் அஞ்சல் துறையில் புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் மதிப்பு திட்டத்தின் மூலம் ஆயிரம் முதல் 2 லட்சம் வரை முதலீடு செய்தால் இரண்டு ஆண்டுக்கு பிறகு 7.5% வட்டியுடன் மொத்த தொகை உங்களுக்கு கிடைக்கும் இதன் மூலம் உங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் இத்திட்டம் 31.3.2025 வரை மட்டும் இருக்கும் என்றும் பொதுமக்களிடம் எடுத்து கூறினர்.

இந்த முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களதுஆதாரில் திருத்தம் செய்துகொண்டனர், பலர் புதிய ஆதார் எடுத்தும் பயனடைந்தனர்.



காரைக்கால் மாவட்டம், கோட்டுச்சேரி கொம்யூன் கோட்டுச்சேரி கீழத்தெரு பகுதியின் அருகாமையில் உள்ள நொச்சி திடல் வாய்க்காலில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலம், 100 நாள் வேலையினை போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்கா துவக்கி வைத்தார். 1773–மீட்டர் நீளம் கொண்ட இந்த வாய்க்கால் 713 வேலை ஆட்களுடன் ஒரு வாரத்தில் பணிகள் முடிக்கப்படும் என வட்டார வளர்ச்சி அதிகாரி தெரிவித்தார். இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அதிகாரி அருணகிரிநாதன் மற்றும் ஊர் பொதுமக்கள், முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர்

## மதுபானக் கொள்கை மூலம் கிடைத்த லஞ்சப் பணத்தை

# கோவா தேர்தலுக்கு ஆம் ஆத்மி பயன்படுத்தியதாக அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகையில் தகவல்

புதுடெல்லி , மே, 4 –

டெல்லி மதுபானக் கொள்கை மூலமாக லஞ்சமாக பெற்ற ரூ.100 கோடி பணத்தை ஆம் ஆத்மி கட்சி, 2022–ம் ஆண்டில் நடைபெற்ற கோவா தேர்தலுக்கு பயன்படுத்தியுள்ளது என்று அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.



ஆம் ஆத்மி தலைமையிலான டெல்லி அரசு 2021–ம் ஆண்டு புதிய மதுபானக் கொள்கையை அறிவித்தது. இதன்படி, டெல்லி பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 800–க்கு மேற்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு மதுபானம் விற்க உரிமை வழங்கப்பட்டது.

இந்நிலையில், இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதில் பெரும் ஊழல் நடந்துள்ளதாகவும். அதில் ஆதாயம் அடைந்த மது விற்பனையாளர்கள் ஆம் ஆத்மி கட்சிக்கு ரூ.100 கோடி லஞ்சம் வழங்கியதாகவும் குற்றம்சாட்டப்பட்டது. இந்த ஊழல் வழக்கில் டெல்லியில் துணை முதல்வராக இருந்த மணிஷ் சிசோடியா உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

தெலங்கானா மாநில முதல்வர் சந்திரசேகர் ராவின் மகளும், பிஆர்எஸ் கட்சியின் மேல்சபை உறுப்பினருமான கவிதாவுக்கும் இந்த ஊழலில் தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டி அவரையும் அமலாக்கத்துறை விசாரித்து வருகிறது. சமீபத்தில் இந்த வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலும் சிபிஐ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

**ரூ.100 கோடி லஞ்சம்**

இந்நிலையில், இவ்வழக்குத் தொடர்பாக அமலாக்கத் துறை கூடுதல் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்துள்ளது. அதில், "மதுபான கொள்கை மூலம் கிடைத்த ரூ.100 கோடி லஞ்சப் பணத்தில் குறிப்பிட்ட பகுதியை ஆம் ஆத்மி கட்சி கோவா தேர்தலுக்கு பயன்படுத்தியுள்ளது. இந்தப் பணப் பரிமாற்றத்தில் ராஜேஷ் ஜோஷி மற்றும் அவரது ஷரியத் புரடெக்சன் நிறுவனம் முக்கிய பங்கு வகித்துள்ளது. இந்நிறுவனம் மூலமே ஊழல் பணம் ஆம் ஆத்மி கட்சிக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. வங்கிக் கணக்குகள் வழியாக மட்டுமல்லாமல், ஹவாலா முறையிலும் பணப் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது. மொத்தத் தொகையில் ரூ.30 கோடி கோவா தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி விளம்பரத்துக்காக பயன்படுத்தப்பட்டிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது" என்று அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

## வெளிநாடுகளில் மருத்துவ படிப்பை முடித்த

# தமிழக மருத்துவ மாணவர்களுக்கு இன்டர்ன்ஷிப்க்கு அனுமதி கிடைக்க நடவடிக்கை : ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, மே, 4 –

மத்திய மாநில அரசுகள், வெளிநாடுகளில் மருத்துவ படிப்பை முடித்த தமிழக மருத்துவ மாணவர்களுக்கு இன்டர்ன்ஷிப்க்கு அனுமதி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய மாநில அரசுகள், தமிழகத்தைச் சேர்ந்த வெளிநாடுகளில் மருத்துவ படிப்பை முடித்த மாணவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். தமிழகத்தைச் சேர்ந்த வெளிநாடுகளில் மருத்துவ படிப்பை முடித்த மாணவர்கள் கோவிட்–19 நோய்த்தொற்று காரணமாக, 2020 ல் இந்தியா திரும்பினர்.

இந்நிலையில் அவர்கள் படித்த கல்லூரியில் ஆன்லைன் வகுப்பின் மூலம் படித்து படிப்பை முடித்தனர். பிறகு தேசிய மருத்துவ கவுன்சில் நடத்திய வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரி (FMGE) என்ற கடினமாக தேர்வை எழுதி அதில் தேர்ச்சி பெற்றனர். ஆனாலும் மீண்டும் படிப்பை தொடர சீனா உள்ளிட்ட பிற நாடுகளுக்கு செல்ல முடியவில்லை என குறை கூறுகின்றனர். ஆன்லைன் வகுப்பு காரணமாக, தேசிய மருத்துவ கவுன்சில் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி ஒரு வருடத்திற்குப் பதிலாக இரண்டு வருடங்கள் CPRI (Compulsory Rotating Medical Intermship) எனப்படும் இன்டர்ன்ஷிப் (பயிற்சி மருத்துவராக) செய்ய வேண்டும். 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதிக்கு முன் அல்லது அன்றைய படிப்பை முடித்தவர்களுக்கு இன்டர்ன்ஷிப் (பயிற்சி மருத்துவராக) வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்து விட்டது. இதன்படி ஒவ்வொரு மாநில மருத்துவக் கவுன்சிலும் விதியை பின்பற்றுவதால், அந்தந்த மாநிலங்களில் இரண்டு வருடங்களாக மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். ஆனால், தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில், தமிழ்நாட்டில் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரி மாணவர்களை தமிழகத்தில் இன்டர்ன்ஷிப் (பயிற்சி மருத்துவராக) செய்ய அனுமதிக்கவில்லை.



இதனால் மருத்துவ மாணவர்கள் படிப்பில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதாவது தமிழ்நாட்டில் இன்டர்ன்ஷிப்க்காக (பயிற்சி மருத்துவராக) ஒரு வருடத்திற்கும் மேலாக சுமார் 600 க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் காத்திருக்கிறார்கள்.

இந்நிலையில் தமிழக மருத்துவ மாணவர்கள் இன்டர்ன்ஷிப் (பயிற்சி மருத்துவராக) செய்ய தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் அனுமதி தர முன் வர வேண்டும் என மாணவர்கள் கோரிக்கை வைக்கின்றனர். எனவே மத்திய மாநில அரசுகள், வெளிநாடுகளில் மருத்துவ படிப்பை முடித்த தமிழக மருத்துவ மாணவர்களுக்கு இன்டர்ன்ஷிப்க்கு அனுமதி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று த.மா.கா சார்பில் வலியுறுத்துகிறோம்.

# தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வெள்ளானூர் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

வெள்ளானூர், மே, 4 –

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, வெள்ளானூர் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.



தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர் அ.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் துணைத் தலைவர், ஒன்றிய கவுன்சிலர், வார்டு உறுப்பினர் மற்றும் பற்றாளர் கிராம பொதுமக்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் முன்னிலையில், கிராம ஊராட்சி நிர்வாகம் பொது நிதி செலவினம் குறித்து விவாதம், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது குறித்து விவாதித்தல், கிராம வளர்ச்சி திட்டம் குறித்து விவாதம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் குறித்து விவாதித்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு, பிரதம மந்திரி கிராம சபை திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் இயக்கம் குறித்து விவாதித்தல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் போன்ற திட்டங்களும் விவாதங்களும் முன்வைக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர் எம்.சதீஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர் ஜி.தயாநிதி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வி.கே. வெங்கடேசன், ஊராட்சி மன்ற செயலர் எஸ்.உமயபார்வதி மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

04.05.2023 ❖ வரலாறு

# மோரை ஊராட்சியில் மே தின கிராம சபை கூட்டம்



வில்லிவாக்கம், மே, 4 -

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், மோரை ஊராட்சியில், மே தினத்தை முன்னிட்டு, வீராபுரம் சமுதாய நலக்கூடத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

மோரை ஊராட்சியின் தலைவர் மற்றும் செயல் அலுவலர் ஆர்.திவாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த கிராம சபை கூட்டத்தில், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது, கிராம வளர்ச்சி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம், அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு, பிரதம மந்திரி கிராம சாலை திட்டம், தூய்மை பாரத இயக்கம் (ஊடகம்) சுகாதாரம், ஜல் ஜீவன் இயக்கம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியன குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பொது மக்களின் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு கிராம ஊராட்சி திட்ட இயக்குனர் (PDO) பாஸ்கரன் மற்றும் வட்டார வளர்ச்சி திட்ட இயக்குனர் எஸ்.மம்மு, ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் வி.கார்த்திக் ஆகியோர் பதிலுரைத்தனர்.

இந்த மே தின கிராம சபை கூட்டத்தில், ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் வி.பவானி வேலு, டி.பாஸ்கர், என்.பாண்டுரங்கன் வி.மாலதி வினோத், கே.சாந்தி குமரேசன், ஆர்.சரவணன், ஆர். முருகன், எஸ்.விஜயலட்சுமி சுரேஷ், எஸ்.கிஷோர், கே.எலிசபெத் குமரவேல், வி.ஜெயலட்சுமி விஜயகுமார் உள்ளிட்ட கிராம ஊராட்சி பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஊராட்சி செயலர் ஜெ.நாகராஜன் ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

# அதிமுக சார்பில் நீர் மோர் பந்தல்: மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் திறந்து வைத்தார்



சீர்காழி, மே, 4 -

தமிழகத்தில் கோடை வெப்பத்தில் இருந்து பொதுமக்களை பாதுகாக்க அதிமுக பொது செயலாளர் அறிவுறுத்துதலின்படி, மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் அதிமுக சார்பில் மயிலாடுதுறை மாவட்ட அவை தலைவர் பி.வி.பாரதி தலைமையில், சீர்காழி நகர செயலாளர் எல்.வி.ஆர்.வினோத் ஏற்பாட்டில் நடைபெற்ற நீர் மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் எஸ்.பவுன்ராஜ் கலந்து கொண்டு நீர் மோர் பந்தல் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி வழங்கினார்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட மகளிரணி செயலாளருமான மா.சக்தி, மாவட்ட துணை செயலாளர் செல்லையன், ஒன்றிய செயலாளர்கள் ஏ.கே. சந்திரசேகரன், ஆதமங்கலம் ரவிச்சந்திரன், நற்குணன், சிவகுமார், பேரூர்செயலாளர் போகர் ரவி, வழக்கறிஞர் ஸ்ரீதர், முன்னாள் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் நாடி செல்வ முத்துக்குமரன், நகர்மன்ற உறுப்பினர்கள் ரமாமணி, கிருஷ்ணமூர்த்தி, மதிவாணன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியின் போது பாட்டாளி மக்கள் கட்சி முன்னாள் கொள்ளிடம் கிழக்கு ஒன்றிய தலைவர் சுகுமாரன் உள்ளிட்ட பா.ம.க நிர்வாகிகள் பத்துக்கும் மேற்பட்டோர் மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்.

# காலை சிற்றுண்டி வழங்கும் பணியை தங்களுக்கு வழங்க கோரி சத்துணவு பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்



ஊத்துக்கோட்டை, மே, 4 -

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில் எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் உள்ளது. பள்ளிகளில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தமிழக அரசால் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் பணியினை சத்துணவு பணியாளர்களுக்கு வழங்க வேண்டும். இத்திட்டத்தை சத்துணவு திட்டத்துடன் இணைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு ஊர்வலமாக வந்தனர். பின்னர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு தங்களது கோரிக்கையை வலியுறுத்தியும், தமிழக அரசை வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட சத்துணவு பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் மாவட்டத் தலைவர் சிவா, ஒன்றிய செயலாளர் தினேஷ், ஒன்றிய பொருளாளர் காந்திமதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கோபிசெட்டிபாளையம் அருகே பங்களாபுதூர் கிராமத்தில் பெரிய மாரியம்மன் கோயில் திருவிழா



கோபி, மே, 4 -

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம் பங்களா புதூரில் மாரியம்மன் கோயில் திருவிழா கொங்கு மண்டல கிராமங்களிலும், நகரங்களிலும் சிறப்பாக நடக்கும்.

முதலில் ஊர் மக்கள் ஒன்று கூடி திருவிழா நடைபெறுவதை பற்றி பேசி முடிவு செய்வார்கள். பின்னர் பூ வைத்து, பொட்டு சாமிக்கு பொட்டு வைத்து, பொங்கல் வைத்து திருவிழாவை தொடங்கி வைப்பார்கள்.

எட்டாம் நாள் புதன்கிழமை கம்பம் நடும் விழா நடைபெறும். கம்பம் நட்டிய எட்டு நாட்களும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரமும் சிறப்பு பூஜைகளும் நடைபெறும். இரவு கம்பத்தில் பூவோடு வைத்து மேளதாளங்களுடன் கம்பத்து ஆட்டம் ஆடி மகிழ்வார்கள். கம்பம் நட்டிய எட்டாம் நாள் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் தான் திருவிழா நடைபெறும்.

புதன்கிழமை முனியப்பனுக்கு கண் திறக்கும் விழா நடைபெறும். பின்னர் மாலை ஊரே ஒன்று சேர்ந்து, ஆற்றுக்கு தீர்த்தம் எடுத்து வரச் செல்வார்கள். தீர்த்தம் கொண்டு வரும்போது வான வேடிக்கை மிகச் சிறப்பாக நடக்கும். பின்னர் தீர்த்த பூசை நடைபெறும். இரவு பெரியதனக்காரர் வீட்டிலிருந்து, சாமிக்கு நகை எடுத்து வருவது, குதிரை பிடிப்பது, அம்மை அழைப்பு போன்ற நிகழ்வுகள் விடிய விடிய நடக்கும்.

வியாழக்கிழமை காலை 4:00 மணிக்கு பொங்கல் விழா, அதன்பின் மாவிளக்கு ஊர்வலம் நடைபெறும். பின்னர் மா விளக்கு பூஜை நடைபெறும். அதன் பின் கிடா வெட்டும் நிகழ்வு நடைபெறும். மாலை 3 மணி அளவில் அக்னி சட்டி ஊர்வலமும், அலகு குத்திக் கொண்டும். சாமி வேடம் மற்றும் சேத்து வேஷம் பூசிக்கொண்டும், அம்மனுக்கு தங்களின் நேர்த்திக் கடன்களை செய்வார்கள். நேர்த்தி கடன் செய்பவர்கள் கடும் விரதம் இருப்பார்கள். விழா தொடங்கிய நாள் முதல், காப்புக் கட்டிக் கொண்ட அனைவரும் விரதம் இருப்பார்கள். வியாழன் மாலை வானவேடிக்கையும், கம்பத்து ஆட்டமும் மிகச் சிறப்பாக நடக்கும். இரவு கம்பம் பிடுங்கும் விழா நடைபெறும். கம்பத்தை எடுத்துக்கொண்டு போய் கிணற்றில் போட்டு வருவார்கள்.

வெள்ளிக்கிழமை மஞ்சள் நீராட்டு விழா நடைபெறும். சிங்க வாகனத்தின் மேல் அம்மன் வெள்ளை பட்டு உடுத்தி, நிறைமனை ஊர்வலம் வரும். ஊர் மக்கள் அனைவரும் பழம், தேங்காய் உடைத்து, அம்மனை வழிபட்டு அனுப்பி வைப்பார்கள். இரவு கண் திருஷ்டி பூஜையுடன் விழா இனிதே நிறைவு பெறும்.

மாரியம்மன் கோயில் பண்டிகை பற்றி ஈரோடு மாவட்டம் பங்களாபுதூரைச் சேர்ந்த எழுத்தாளர் தமிழ் நதி கூறியபோது, மாரியம்மன் பண்டிகை எங்கள் ஊரில் காலங்காலமாக நடந்து வரும் பண்டிகை. ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி ஒற்றுமையாகக் கொண்டாடும் பண்டிகை. அனைத்து பிரிவினருக்கும் இதில் முறை கொடுக்கப்பட்டுள்ளது. மாரியம்மனை வழிபட்டால் ஊரில் அம்மை நோய் வராமல் நம்மை காப்பாள் என்று கூறினார்.

# வேலூர் மாவட்டத்தில் ஸ்ரீ பொன்னியம்மன் ஆலய தேர்த்திருவிழா மற்றும் ஈஸ்வரன் மலை சுற்றுதல்



வேலூர், மே, 4 -

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், சிங்காரெட்டியூர் கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பொன்னியம்மன் ஆலயத்தின் 24 ஆம் ஆண்டு ஈஸ்வரன் மலை சுற்றுதல் மற்றும் தேர் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் முதல் நாளன்று அம்மனுக்கு பொங்கலிடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. சித்திரை மாதம் 19 ஆம் நாள் 02.05.2023 செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை 3.00 மணி அளவில் அம்மன் திருக்கல்யாணமும், காலை 6.00 மணிக்கு அம்மனை நேரில் எழுந்தருள செய்து ஈஸ்வரன் மலை சுற்றும் தேர் திருவிழா வாண வேடிக்கையுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று இரவு 10:30 மணி அளவில் அம்மன் பல்லக்கில் திருவீதி உலாவும் நடைபெற்றது.

மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக, 03.05.2023 புதன்கிழமை பகல் 2.00 மணி அளவில் அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு விழா நடைபெற்றது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேட்டுக்குடி கோ.வெங்கடேச ரெட்டி, ஆலய தர்மகர்த்தா இரா. ஜெயராம ரெட்டி, மேட்டுக்குடி சு.சத்தியசீலன், மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கி.வெங்கடேஷன், எஸ். அரவிந்தன் மற்றும் சிங்காரெட்டியூர் கிராம ஊர் பொதுமக்கள், இந்து முன்னணியினர், இளைஞர் அணியினர் மற்றும் பக்தகோடியினர் செய்திருந்தனர்.



▶ காரைக்கால் மாவட்டம், நெடுங்காட்டில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் நலத்துறை பெண்கள் விடுதியில் ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை என பெயர் மாற்றப்பட்ட புதிய பெயர் பலகையை நேற்று போக்குவரத்து மற்றும் ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சந்திர பிரியங்கா திறந்து வைத்தார். உடன் இந்நிகழ்வில் உதவி இயக்குனர் மதன்குமார், அலுவலக ஊழியர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

# அரியலூர் மாவட்ட மதிமுக செயலாளராக ராமநாதன் தேர்வு



அரியலூர், மே.4-

அரியலூர் மாவட்ட மதிமுக செயலாளராக வி.கைகாட்டி க.ராமநாதன், போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இது பற்றி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு. சின்னப்பா வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,

அரியலூர் தனியார் திருமண மண்டபத்தில், அரியலூர் மாவட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாவது அமைப்புத் தேர்தல் நடைபெற்றது, கட்சியின் மாநில அமைப்பு செயலாளர் ஆ. வந்திய தேவன், தேர்தல் நடத்தும் அலுவலராக முன்னிட்டு நடத்திய, மாவட்ட நிர்வாகிகளுக்கான தேர்தலில், ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் பற்றிய விவரம் வருமாறு,

மாவட்ட அவைத் தலைவராக எஸ். சகாதேவன், மாவட்டச் செயலாளராக க.ராமநாதன், மாவட்டப் பொருளாளராக வீர.புகழேந்தி, மாவட்ட துணைசெயலாளர்களாக ம. கல்யாணகுமார், உஷா செல்வம், பழனிவேல், கலிஸ்துராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்களாக பெ. தங்கவேல், சி. இளவரசன், பொதுக்குழு உறுப்பினர்களாக சோ .மோகன்தாஸ், சி. ஜெயபால், க.தங்கராசு, கொளஞ்சி என்கிற சிவக்குமார் உள்ளிட்டோர், ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கடையநல்லூரில் பூத் கமிட்டி மற்றும் நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்



தென்காசி,மே.4-

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடையநல்லூர் நகரத்தில் பூத் கமிட்டி மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தேவர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் பிறந்த நாளை முன்னிட்டு ஒரு கோடி புதிய உறுப்பினர்களை கழகத்தில் இணைக்க வேண்டி தலைமை கழக ஆணைக்கிணங்க புதிய உறுப்பினர் சேர்க்கை கடையநல்லூர் நகர செயலாளர் எஸ். அப்பாஸ் தலைமையில் நகர அவைத் தலைவர் பெட்டி முருகன், முன்னாள் மாவட்டச் செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான மா.செல்லத்துரை முன்னிலையில் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் பொறுப்பாளராக ஆவின் ஆறுமுகம், ஹக்கீம், இஞ்சி இஸ்மாயில் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கடையநல்லூர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபிபுர் ரஹ்மான், துணை சேர்மன் ராசையா, நகரத் துணைச் செயலாளர் காசி, ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், நகர்மன்றஉறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வார்டுபிரதிநிதிகள், முருகன், சிட்டி திவான் மைதீன், மாரி, காளிமுத்து, அக்பர், அப்துல் ரசாக், செய்யது மசூது, கண்ணன், கணேசன், முருகையா, மக்தூம், விஜயன், சுப்பையாலதா, ரவி, வீரபுத்திரன், மகளிர் அணி அமைப்பு செயலாளர் தனலட்சுமி, சாகுல் ஹமீது, யாசின், சுப்பாராம், சக்திவேல்,பெருமாள்துரை,உவைஸ், அப்துல் மஜீத், அப்துல் வஹாப், மாரி, ஹப்பி புல்லா,வீ. டி.எம். அலி, கருப்பசாமி, அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ அரியலூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் அரியலூர் மாவட்ட நிர்வாகம், தமிழ் பண்பாட்டு பேரமைப்பு மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் 7-வது புத்தகத் திருவிழாவில் எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே என்ற தலைப்பின் கீழ் அரங்கன் தமிழ்-ன் கவியரங்கம் நடைபெற்றது.

# செல்போன் கோபுரம் அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் முயற்சியால் பதற்றம் தணிந்தது



திருவள்ளூர், மே, 4 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி, சுப்பிரமணிய நகர் பகுதியில் சத்ய சாய்பாபா நகர் உள்ளது. இங்கு நூற்றுக்கணக்கானோர் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் தனியாருக்கு சொந்தமான செல்போன் கோபுரம் ஒன்று உள்ளது. அதன் அருகே மற்றொரு செல்போன் கோபுரம் அமைக்கும் பணி துவங்கியது. இதனால் இப்பகுதி மக்கள் செல்போன் கோபுரம் அமைக்க கூடாது என்றும், இதனால் சுகாதார சீர்கேடு, உடல் உபாதைகள் உள்ளிட்டவை வரும் என்று கூறி உடனடியாக செல்போன் கோபுரம் அமைக்கும் பணியை நிறுத்த வேண்டும் என கோரி கடந்த மாதம் 25-ம் தேதி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்ற தலைவரிடம் முறையிட்டு புகார் மனு அளித்தனர். இதனால் அப்பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் செல்போன் கோபுரம் பணி அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடந்து வந்தது. இதனை அறிந்த இப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் நேற்று காலை செல்போன் கோபுரம் அமைக்கும் பணி நடைபெறும் இடத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் செல்போன் கோபுரம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒப்பந்த தொழிலாளர்கள் பணியை பாதியிலேயே நிறுத்திவிட்டு சென்றுவிட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த ஆரணி பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் கலாதரன், பேரூராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி, வார்டு உறுப்பினர்கள் கௌசல்யா, அருணா ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டனர். ஆனால் பொதுமக்கள் தங்களது கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதன் பின்னர், பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். செல்போன் கோபுரம் என்பது அனைத்து இடங்களிலும் அமைக்கப்படுகிறது. இவ்வாறு செல்போன் கோபுரங்கள் அமைக்க கோர்ட் வழங்கியுள்ள தீர்ப்பு குறித்தும், கலெக்டரிடம் அனுமதி பெறுவது குறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் விளக்கி கூறினார். எனவே செல்போன் கோபுரம் அமைக்கும் பணிக்கு யாரும் இடையூறு செய்யக்கூடாது. உங்களது ஆட்சேபனையை தெரிவிப்பதாக இருந்தால் கலெக்டரை சந்தித்து புகார் அளியுங்கள் என்று அறிவுறுத்தினார்.

இதனை ஏற்று அப்பகுதி மக்கள் அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர். இப்பிரச்சினையால் சுமார் 2 மணி நேரம் இப்பகுதியில் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.

# பிரதம மந்திரி வீடு கட்டும் பணிகளை விரைந்து முடிக்க மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி அறிவுறுத்தல்



தரங்கம்பாடி, மே, 4 -

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார் கோயில் ஊராட்சி ஒன்றியம், ஆக்கூர் கிராம ஊராட்சி மாஸ் திருமண மண்டபத்தில் ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட ஆக்கூர், மடப்புரம், காலஹஸ்திநாதபுரம், திருக்கடையூர், காழியப்பநல்லூர், கிடங்கல், ஆகிய ஊராட்சிகளில் பாரத பிரதமரின் வீடு கட்டும் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்துவது தொடர்பாக ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் பயனாளிகளிடம் கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி பேசியதாவது, மயிலாடுதுறை மாவட்டத்தில் பாரத பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 33,000 வீடுகள் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதில் 25,000 வீடுகள் பணிகள் முடிவுற்றும், நடைபெற்றும் வருகின்றன. இதில், 8000 பயனாளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்படாமல் உள்ளது. செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 1942 வீடுகள் பணிகள் தொடங்காமல் உள்ளன. ஊராட்சி மன்ற தலைவர்கள் வீடு கட்டும் பணிகளை விரைந்து முடிக்க பொதுமக்களிடம் அறிவுறுத்த வேண்டும்.

அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் ஊராட்சி மன்ற தலைவர்கள் விரைந்து செயல்பட வேண்டும். பாரத பிரதமரின் வீடுகள் ஒதுக்கீடு பெற்ற பயனாளிகளுக்கு ஏதேனும் இடையூறுகள் இருந்தால் மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவிக்கலாம். உடனடியாக நிவர்த்தி செய்து தரப்படும். கட்டுமான பொருள்களுக்கு (மணல், செங்கல்) இடையூறு இருந்தால் அதையும் தெரிவிக்கலாம்.

தமிழக முதலமைச்சர் கொண்டு வந்த இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், திட்டம் போல வீடு கட்டும் திட்டங்களை விரைவு படுத்துவதற்காக மக்களை தேடி மாவட்ட நிர்வாகம் வந்திருக்கிறது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் வீடு ஒதுக்கீடு பெற்ற பயனாளிகள் தங்களுடைய வீடு கட்டும் பணிகளை உடனடியாக விரைந்து தொடங்கி முடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் பேசினார்.

முன்னதாக, செம்பனார்கோயில் ஊராட்சியில் ஆக்கூர் கிராம ஊராட்சி, உடையார் கோயில் பத்து கிராமத்தில் நடைபெற்று வரும், பாரத பிரதமரின் வீடு கட்டும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், ஆக்கூர் கிராம ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வளர்ச்சி பணிகள் குறித்து ஒன்றிய பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆலோசனை கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில்ஊரகவளர்ச்சி துறை இணை இயக்குனர் ஸ்ரீலேகா, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் செந்தில்குமார், உதவி இயக்குனர் மஞ்சுளா, செம்பனார் கோயில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயலட்சுமி, மீனா, தரங்கம்பாடி வட்டாட்சியர் காந்திமதி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சந்திரமோகன், செல்வநாயகம், ஜெயமாலதி சிவராஜ், கருணாநிதி, மோகன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ராஜகண்ணன், சாந்தி, ஊரக வளர்ச்சித் துறையினர், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தில்லையாடி பெரிய வாய்க்கால் தூர் வாரும் பணியினை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு



மயிலாடுதுறை, மே, 4 -

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி பெரிய வாய்க்கால் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் ரூ.21 இலட்சம் செலவில் 22 கி.மீ.தூரம் நடைபெற்று வரும் தூர்வாரும் பணியினை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க நீர்வளத் துறையின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 51 பணிகள் ரூ.8 கோடியே 6 இலட்சம் செலவில் 749 கி.மீ. தூரம் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை கண்காணிக்க கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலர், உதவி வேளாண் அலுவலர், உழவர் குழுவினர் அமைக்கப் பட்டுள்ளனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் விவசாயிகளின் எண்ணங்களுக்கு ஏற்ப சிறப்பாக தூர் வாரப்படும்.

தில்லையாடி கிராம ஊராட்சி, தில்லையாடி பெரிய வாய்க்கால் நீர்வளத் துறையின் மூலம் ரூ.21 இலட்சம் செலவில் 22 கி.மீ.தூரம் தூர்வாரும் பணியினை நான் மற்றும் உழவர் குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். தில்லையாடி பெரியவாய்க்கால் சிறப்பாக தூர்வாரப்பட்டுள்ளது. இவ்வாய்க்கால் தூர் வாரப்படுவதனால் 680 ஏக்கர் சாகுபடி நிலங்கள் பாசன வசதி பெறும் என ஆட்சியர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர், பாண்டியன், உதவி பொறியாளர் விஜயபாஸ்கர், தரங்கம்பாடி வட்டாட்சியர் காந்திமதி மற்றும் நீர்வளத்துறை, வருவாய்துறை, ஊரக வளர்ச்சித் துறை, உழவர் குழுவினர், விவசாயிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### கொத்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில்

# சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்



ஆலங்குடி, மே. 04-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று அடிக்கல் நாட்டி, சேந்தன்குடியில் புதிய மின்மாற்றியினை துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் கொத்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும் சேந்தன்குடியில் புதிய மின்மாற்றி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். இந்நிகழ்வுகளில், துணை ஆட்சியர் (பயிற்சி) ஜெயஸ்ரீ, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு சாதாரண கூட்டம் ஒன்றிய குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி ஒன்றிய ஆணைய ஆயிஷா ராணி வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சிகள் கோகுல கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், ஒன்றிய அலுவலர் வரவு செலவு அறிக்கை வாசித்தார் . கூட்டத்தில் பேசிய கொத்த கோட்டை ஒன்றிய கவுன்சிலர் கருப்பையா பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தார், திருக்கட்டளை ஒன்றிய கவுன்சிலர் கண்ணன் உள்ளிட்ட கவுன்சர்கள், ஒன்றிய அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



▶ புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் வட்டார வள மையத்தில் புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் வழிகாட்டுதலின்படியும், மாவட்ட உதவி கல்வி திட்ட அலுவலர் அறிவுறுத்தலின்படியும் ,புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் கீழ் செயல்பட்ட தன்னார்வலர்கள் பாராட்டு விழா ,பரிசளிப்பு விழா வட்டார கல்வி அலுவலர் கருணாகரன் தலைமையில் நடைபெற்றது வட்டார கல்வி அலுவலர்கள் கவிதா, தனராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் வட்டார வள மைய மேற்பார்வையாளர் தங்கமணி புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் செயல்பாடுகள், அதன் முக்கியத்துவம் குறித்து தன்னார்வலர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார், வட்டார வள மைய ஒருங்கிணைப்பாளர் சித்திக் பாத்திமா நன்றி கூறினார், ஏற்பாடுகளை வட்டார வளமைய ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.

# அமமுகவில் இருந்து இன்னும் 4 பேர் அதிமுகவுக்கு வந்தாலே அக்கட்சியின் கூடாரம் காலி இபிஎஸ் பேச்சு



சேலம், மே. 04-

''அமமுகவில் இருந்து இன்னும் 4 பேர் அதிமுகவுக்கு வந்தால், அக்கட்சியின் கூடாரம் காலியாகிவிடும்'' என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசினார்.

சேலம் மாவட்டம், ஓமலூரில் உள்ள மாவட்ட அதிமுக அலுவலகத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் கட்சி நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசியது: "இன்னும் 10 நாட்களுக்குள் உறுப்பினர் சேர்க்கையை முடித்து விட வேண்டும். நான் பொதுச் செயலாளரான பிறகு 90 ஆயிரம் பேர் மற்ற கட்சியில் இருந்து விலகி, நமது கட்சியில் இணைந்துள்ளனர்.

நாம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றுதான் எம்ஜிஆர் கட்சியை தோற்றுவித்தார். ஜெயலலிதா, சேவல் சின்னத்தில் போட்டியிடும்போது, சேவல் சின்னத்துக்கு எதிராக போட்டியிட்ட நபர்களுக்கு உதவியாக இருந்தவர் ஓபிஎஸ். அவர் மூன்று முறை முதல்வராக இருந்தேன் என்று கூறிக்கொள்கிறார். ஆனால், அவர், என்னிடம் கட்சிக்கு வந்து விடுவதாக தூது விட்டார். அதற்கு தலைமை கழக நிர்வாகிகள் ஒப்புக்கொள்ளவில்லை. இப்போது, அவர் எந்த நீதிமன்றதுக்கு சென்றாலும் வெற்றிபெற முடியாது.

தேர்தல் ஆணையம் தெளிவான தீர்ப்பை நமக்கு வழங்கியுள்ளது. ஓபிஎஸ் இல்லை, வேறு எவராலும் அதிமுக-வை ஒன்றும் செய்ய முடியாது. அமமுக கூண்டோடு காலியாகி, ஒவ்வொருவராக நமது கட்சிக்கு வந்து கொண்டுள்ளனர். அமமுக-வில் இருந்து இன்னும் 4 பேர் அதிமுக-வுக்கு வந்தால், அக்கட்சியின் கூடாரம் காலியாகிவிடும்.

பெரும்பான்மையான பொதுக் குழு உறுப்பினர்கள் தான் என்னை தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், ஓபிஎஸ் பொதுக்குழு செல்லாது என கூறுகிறார். இவரை ஒருங்கிணைப்பாளராக தேர்ந்தெடுத்ததே, அந்த பொதுக்குழு உறுப்பினர்கள்தான். இவரை ஒருங்கிணைப்பாளராக தேர்ந்தெடுத்தால் அது செல்லும், என்னை பொதுச் செயலாளராக தேர்ந்தெடுத்தால் அது செல்லாது என்கிறார். ஓபிஎஸ் திமுகவின் பி டீமாக செயல்பட்டு வருகிறார். திமுகவில் அமைச்சராக உள்ள செந்தில் பாலாஜி, பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் இருக்கும் வரை நமக்கு கவலையில்லை. அவர்கள் இருவருமே அக்கட்சியின் வீழ்ச்சியைப் பார்த்துக்கொள்வார்கள்.

நமது கட்சியில் பொறுப்பில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணியை சரியாக செய்தாலே, வரும் நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தலில் அதிமுக அமோக வெற்றி பெறும்" என்று அவர் பேசினார். கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வெங்கடாஜலம், எம்எல்ஏ பாலசுப்பிரமணியம். நிர்வாகிகள் பன்னீர்செல்வம். செல்வராஜ், சக்திவேல், சவுண்டப்பன் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் புளியங்குடியில் ஸ்ரீ முப்பெரும் தேவியர் பவானி அம்மன் ஆலயத்தில் சித்திரை மாத பெருந்திருவிழா



தென்காசி,மே.4-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் கடந்த 25-ம் தேதி கால்நாட்டு நிகழ்ச்சியுடன், காப்பு கட்டுதலுடன் 9 நாட்கள் திருவிழா கோலமாக நடைபெற்றது, நிகழ்ச்சியில் சிறப்பு பூஜை, முளைப்பாரி, கும்மி பாட்டு, தேவி ஸ்ரீ பவானி அம்மனுக்கு சிறப்பு அலங்கார, அபிஷேகம், ஆராதனை நடைபெற்றது.

அருள் வாக்கிற்கு பிரசித்தி பெற்ற ஓம் ஸ்ரீ முப்பெரும் தேவியர் பவானி அம்மன் ஆலயத்தில் அருள் பாலிக்கும் நாக கன்னியம்மன், பெரியபாளையத்து பவானி அம்மன், பால நாகம்மன், கோவிலில் சித்திரை மாத பெருந்திருவிழா நடைபெற்றது. இதில் 508 அக்னி சட்டி ஊர்வலம் நடைபெற்றது, ஸ்ரீ பால விநாயகர் கோவிலில் இருந்து குருநாதர் சக்திஅம்மா தலைமையில் பால்குடம், தீர்த்தத்தண்ணீர் 308பேர் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டு நேர்த்திக்கடன்களை செலுத்தினர், நள்ளிரவு ரத்த காளியம்மனுக்கு சிறப்பு படையல் பூஜையும் பக்தர்களுக்கு பிரசாதமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அன்னதான நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டனர், மேலும் ஸ்ரீ முப்பெரும் தேவியர் பவானி அம்மன் ஆலயத்திற்கு கேரளா,ஆந்திரா, கர்நாடகா, கல்கத்தா போன்ற வெளிமாநிலங்களில் இருந்து பக்தர்கள் பக்தி பரவசத்துடன் கலந்து கொண்டனர், நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோவில் குருநாதரால் செய்யப்பட்டிருந்தது.

# உளுந்தூர்பேட்டையில் பள்ளி செல்லா குழந்தைகள் மற்றும் குழந்தை தொழிலாளர்களை கண்டறியும் களப்பணி



கள்ளக்குறிச்சி, மே. 04-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில், உளுந்தூர்பேட்டை நகராட்சி பகுதிகளில் வசித்து வரும் நரிக்குறவர் குடியிருப்பு மற்றும் இருளர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் பள்ளி செல்லா குழந்தைகள் மற்றும் குழந்தை தொழிலாளர்களை கண்டறியும் களப்பணி,மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் இளையராஜா மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளர் அருள்செல்வம் ஆகியோர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

அப்பொழுது பள்ளிக்கு செல்ல குழந்தைகளை அனுப்பி வைக்குமாறு பெற்றோர்களிடம் அறிவுறுத்தினர், அப்பொழுது பள்ளிக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதி இல்லை எனக்கூறிய பெற்றோர்களிடம் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், படிக்கும் வயதில் குழந்தைகளை வேலைக்கு அனுப்பி அவர்களின் எதிர்காலத்தை வீணடிக்க வேண்டாமென அறிவுறுத்தினர், இக்களப்பணியின் போது 15 பள்ளிச்செல்லா குழந்தைகளையும், ஒரு குழந்தை தொழிலாளரையும் கண்டறிந்து மீண்டும் அவர்களை பள்ளியில் சேர நடவடிக்கை மேற்கொண்டு அதன் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.

இக்களப்பணியில் உமாமகேஸ்வரி, சிவரஞ்சனி, குழந்தைகள் நலக்குழுத் தலைவர் சந்தோஷ்குமார், சமூக சேவகர் அமுதவள்ளி, ஆசிரியர் பயிற்றுநர்கள் சக்திவேல், காசிலிங்கம், ரேஷ்மா, சாந்தகுமாரி, சரிதா, சுரேஷ், ரம்யா, ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 26 வது உலகளாவிய தலைமைத்துவ உச்சி மாநாட்டில் மௌண்ட் சீயோன் கல்வி நிறுவனத்திற்கு மணிமகுடம்



புதுக்கோட்டை, மே. 04-

26 வது உலகளாவிய தலைமைத்துவ உச்சி மாநாடு, 2023 சமீபத்தில் தாய்லாந்தின் பாங்காக்கில் உள்ள சியாம் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான ஐநா நிலையான வளர்ச்சி இலக்குகள் - 2030 என்பது இம்மாநாட்டின் கருப்பொருள்.

உச்சிமாநாட்டின் இரண்டாவது நாளில் 'கடந்த கால தொற்றுநோயிலிருந்து எதிர்கால பாடங்கள் - கல்வியில் கலப்பு கற்றல்' என்ற தலைப்பில் கட்டுரை வழங்கும் நிகழ்வு நடத்தப்பட்டது. புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் டாக்டர் ஜோனத்தன் ஜெயபாரதன் "சிறப்பான கல்வி அளித்தல்" என்ற பிரிவில் சிறந்தவராகத் தேர்வு செய்யப்பட்டார், மேலும் அவருக்கு தாய்லாந்தின் பாங்காக்கில் உள்ள சியாம் பல்கலைக்கழகத்தின் தலைவர் டாக்டர் போர்ஞ்சாய் மோங்கோன்வனிட் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கினார். சிறப்பு விருந்தினராக தாய்லாந்தின் ரியல் எஸ்டேட் மற்றும் விருந்தோம்பல் தொழில்முனைவோர் பால் போர்ந்தெப் ஸ்ரீநருலா மற்றும் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் (டாக்டர்) ராஜேஸ் ஜி கொன்னூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பலதரப்பட்ட ஐந்து நாள் மாநாட்டில் குழு விவாதங்கள் மற்றும் காகித விளக்கக்காட்சிகள் இருந்தன. தாய்லாந்து, தென் கொரியா, வியட்நாம், உஸ்பெகிஸ்தான், நார்வே, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து பல்வேறு புகழ்பெற்ற நிறுவனங்களைச் சேர;ந்த பல்வேறு சர்வதேச தலைவர்களின் ஆற்றல்மிக்க கருத்துகளால் பாங்காக் உச்சி மாநாடு சிறப்புற்றிருந்தது. இம்மாநாட்டில் தலைவர்கள் கருத்தரங்கில் தங்கள் படைப்பைச் சமர்ப்பிப்பதின் நோக்கம் அனைத்துநிபுணர்கள் ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்பகைவினைஞர்கள், கல்வியாளர்கள், தொழில்துறைக்கு ஒரு தளத்தை வழங்குவதாகும். இம்மாநாட்டின் முத்தாய்ப்பாக, பிரதிநிதிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகள், சுகாதார சேவைகள், கல்வி மற்றும் கற்றல் சமூக-பொருளாதார மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு உள்ளிட்ட இன்றைய நவீன சமுதாயத்தின் அனைத்து வழிகளிலும் உந்து சக்திகள் மற்றும் போக்குகள் பற்றி விவாதிக்க அக்டோபர் 17 ஆம் தேதி மௌண்ட் சீயோன் சர்வதேச பள்ளி (சிபிஎஸ்இ) பைலட் நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

கலப்பின கற்றல் முறையில் ஆசிரியர்களை நடைமுறைப்படுத்துவதற்காக 57 மணி நேரம் பயிற்சி அளிக்கப்பட்டது. எதிர்காலக் கல்வியில் எதிர்காலத் தயார்நிலைக்காக கலப்புக் கற்றலைக் கொண்டுவர எங்கள் மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் ஜெயபரதன் சீரிய முயற்சியினாலும், உழைப்பினாலும் கிடைத்த வெற்றி என்று கூறினால் அது மிகையாகாது.



▶ மதுரையில் சித்திரை திருவிழாவை ஒட்டி மீனாட்சி அம்மன் கோயிலில் தேரோட்டம் வெகு விமர்சியாக நடைபெற்றது, இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை சிறப்பித்த காட்சி.

# புதுக்கோட்டை அருகே ஜல்லிக்கட்டு போலீஸ் உட்பட இருவர் பலி :முதல்வர் நிதியுதவி



அரிமளம், மே.4.

அரிமளம் அருகே கோயில் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற மஞ்சுவிரட்டு நிகழ்சியில் 63 பேர் காயமடைந்தனர், இதில் 23 பேர் படுகாயம், ஒரு போலீஸ்காரர் உட்பட 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அருகே உள்ள கல்லூர் அரியநாயகி அம்மன் கோயில் மது எடுப்பு திருவிழாவை முன்னிட்டு செம்முனீஸ்வரர் மஞ்சுவிரட்டு திடலில் நேற்று காலை 10 மணியளவில் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை, மதுரை, தஞ்சாவூர், திண்டுக்கல், மேலூர், ராமநாதபுரம், காரைக்குடி, அறந்தாங்கி, கே.புதுப்பட்டி, கண்டனூர், புதுவயல்,பள்ளத்தூர்,திருமயம், சிவகங்கை, திருப்பத்தூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து சுமார் 800க்கும் மேற்பட்ட காளைகள் கலந்து கொண்டன.

முதலில் உள்ளூர் கோயில் காளை மஞ்சுவிரட்டு திடலில் இருந்து அவிழ்த்துவிடப்பட்டது, இதனை தொடர்ந்து வெளியூர்களில் இருந்து வந்த காளைகளை மாட்டின் உரிமையாளர்கள் அவிழ்த்துவிட்டனர், இதனிடையே விழா ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்காத வகையில் காளைகள், மக்கள் கூட்டம் அதிகம் இருந்ததால் காளைகள் மற்றும் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் விழா கமிட்டியினர், போலீசார் திணறினர். ஒரு கட்டத்தில் வாகனத்தில் ஏற்றி வந்த காளைகளை மஞ்சுவிரட்டு திடலில் நீண்ட நேரம் காத்திருந்த அவிழ்க்க முடியாமல் போனதால் ஒருசில மாட்டின் உரிமையாளர்கள் கட்டுபாடுகளின்றி மாடுகளை ஆங்காங்கே அவிழ்த்துவிட தொடங்கினர். இதனால் மஞ்சுவிரட்டு திடல் முழுவதும் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் அவிழ்க்கப்பட்ட காளைகள் பயந்து நாலாபுறமும் மிரண்டு ஓடின.

கூட்டத்தை கண்டுமிரண்டு ஓடிய காளைகளை அப்பகுதி இளைஞர்கள் விரட்டி பிடிக்க முயற்சி செய்தனர், இதில் ஒருசில காளைகள் அப்பகுதி இளைஞர்களிடம் பிடிபட்ட நிலையில் பெரும்பாலான காளைகள் தப்பித்து கூட்டத்திற்குள் ஓடின, அப்போது பார்வையாளர்கள் கூட்டத்தில் புகுந்து காளைகள் முட்டியதில் பார்வையாளர்கள் உட்பட 63 பேர் காயமடைந்தனர். சிறிய அளவில் காயமடைந்தவர்களுக்கு மஞ்சுவிரட்டு திடல் அருகே அமைக்கப்பட்டிருந்த முதலுதவி மையம் மூலம் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் படுகாயமடைந்த 23 பேர் புதுக்கோட்டை, அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். இதனிடையே நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம், காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமானதால் மஞ்சுவிரட்டுநிகழ்ச்சியைநிறுத்த அதிகாரிகள் உத்தரவிட்டனர், இதனைதொடர்ந்து மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி பாதியில் நிறுத்தப்பட்டது.

விழாவில் கலந்துகொண்ட மாட்டின் உரிமையாளருக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது, மஞ்சுவிரட்டை காண சுற்றுவட்டார பகுதிகளில் இருந்துபல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வந்திருந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூர் கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் செய்திருந்தனர். கே.புதுப்பட்டி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

**ஒரு போலீஸ்காரர், தச்சு தொழிலாளி உயிரிழப்பு:**

புதுக்கோட்டை மாவட்டம் மீமிசல் காவல் நிலையத்தில் அறந்தாங்கி எல் என் புரம் பகுதியைச் சேர்ந்த ஜெயகிருஷ்ணன் மகன் நவநீதகிருஷ்ணன்(31) காவலராக பணிபுரிந்து வந்தார். கல்லூர் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிக்கு வந்திருந்த நவநீதகிருஷ்ணனை எதிர்பாராத விதமாக மாடு நெஞ்சில் முட்டியது. இதில் பலத்த காயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் மஞ்சுவிரட்டு திடலில் நவநீதகிருஷ்ணன் சுருண்டு விழுந்தார். இதனைத் தொடர்ந்து சக போலீசார் அவரை மீட்டு மஞ்சுவிரட்டு திடலில் அமைக்கப்பட்டிருந்த முதலுதவி சிகிச்சை முகாமிற்கு அழைத்துச் சென்று முதலுதவி அளித்தனர். இதனைத் தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக காரைக்குடியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நவநீதகிருஷ்ணன் உயிர் இழந்தார்.

இதேபோல் அரிமளம் அருகே உள்ள கே.புதுப்பட்டி கிராமத்தைச்சேர்ந்த காத்தப்பன் மகன் சுப்ரமணியன் (35) தச்சு வேலை செய்து வந்தார், இவர் நேற்று கல்லூரில் நடைபெற்ற மஞ்சுவிரட்டு பார்க்க வந்திருந்தார். அப்போது மஞ்சு விரட்டுதிடலில்மாடுமுட்டியதில் பலத்த காயம் அடைந்த நிலையில் ஆம்புலன்சில் மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் சுப்பிரமணியன் பரிதாபமாக உயிரிழந்தார். உயிரிழப்புகள் குறித்து கே.புதுப்பட்டி போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாடு முட்டியதில் பலியான காவலர் நவநீதகிருஷ்ணன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# திருவையாறு ஐயாறப்பர் கோயில் சித்திரை பெருவிழா தேரோட்டம் 'ஐயாரா, ஐயாரா' என தேரின் வடம் பிடித்து இழுத்த பக்தர்கள்



திருவையாறு, மே. 04-

திருவையாறு ஐயாறப்பர் கோயிலில் சித்திரை தேரோட்டம் நடைபெற்றது. தஞ்சாவூர் மாவட்டம் திருவையாற்றில், தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான, ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி அம்பாள் சமேத ஐயாறப்பர் கோயில் உள்ளது. இக்கோயிலில் சித்திரை பெருவிழா கடந்த மாதம் 25-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

29-ம் தேதி மாலை தன்னைத்தானே பூஜித்தல் நிகழ்வும் நடைபெற்றது. இதில் மரகதலிங்கத்துக்குப் பால், தேன், மஞ்சள், சந்தனம் ஆகியவற்றால் அபிஷேகம் நடைபெற்றது. விழாவின் பிரதான நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று காலை நடைபெற்றது. தேரில் அறம் வளர்த்த நாயகி சமேத ஐயாறப்பர் சிறப்பலங்காரத்தில், பஞ்ச மூர்த்திகளுடன் காட்சியளித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று ஐயாரா ஐயாரா எனக் கோஷமிட்டபடி தேரின் வடம் பிடித்து இழுத்தனர்.

விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்ச்சியான சப்தஸ்தான பெருவிழா வரும் 6ம் தேதி சனிக்கிழமை நடைபெறுகிறது. அன்று காலை அறம் வளர்த்த நாயகி சமேத ஐயாறப்பர் கண்ணாடி பல்லக்கிலும், நந்திகேஸ்வரர் சுயசுவாம்பிகையுடன் வெட்டிவேர் பல்லக்கில் புறப்பட்டு திருப்பழனம், திருசோற்றுத்துறை, திருவேதிக்குடி,திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, சென்று அன்று இரவு காவிரி ஆற்றில் 6 ஊர் பல்லக்குகளும், தில்லைஸ்தானத்தில் சங்கமிக்கும் நிகழ்ச்சி நடக்கிறது.

இரவு தில்லைஸ்தானம் காவிரி ஆற்றில்வானவேடிக்கை நடைபெறுகிறது. 7-ம் தேதி தில்லைஸ்தானம் பல்லக்குடன் 7 ஊர் பல்லக்குகளும் திருவையாறு வீதிகளில் உலா வந்து தேரடியில் பொம்மை பூப்போடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பொம்மை பூ போடும் நிகழ்ச்சி முடிந்தவுடன் 6 ஊர் பல்லக்குகளும் கோயிலுக்கு சென்று தீபாராதனை முடிந்து அந்தந்த ஊர்களுக்குப் புறப்பட்டு செல்கிறது. இதற்கான ஏற்பாடுகளைத் தருமபுர ஆதீனம் 27-வது குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரியர் சுவாமிகள், கோயில் நிர்வாகிகள் செய்துள்ளனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.





# காணாமல் போன குளத்தை கண்டுபிடித்து தூர்வாரிய ஊராட்சி மன்றத் தலைவர்

# புதுக்கோட்டை அருகே ஜல்லிக்கட்டு போலீஸ்காரர் உட்பட 2 பேர் பலி









# அதிமுகவிற்கு இன்னும் 4 பேர் வந்தாலே அமமுக காலியாகிவிடும்

சென்னை / புதுக்கோட்டை | 04.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10


புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சாம் பிட்ரோடா , இந்திய தொழில் முனைவாளர், கண்டுபிடிப்பாளர் (பி.1942)



என். ராம் , இந்திய இதழியலாளர் (பி.1945)



## இன்றைய நினைவு நாள்

திப்பு சுல்தான் , மைசூர் பேரரசர் (பி.1750) (இ.1766)



காயிதே மில்லத் , தமிழக முசுலிம் அரசியல் தலைவர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1896) (இ.1972)



டபிள்யூ. தகநாயக்க , இலங்கையின் 5வது பிரதமர் (பி.1902) (இ.1997)



டிராபிக் ராமசாமி , தமிழக சமூக செயற்பாட்டாளர் (பி.1934) (இ.2021)



## பன்னாட்டுத் தீயணைக்கும் படையினர் நாள்